# காஞூர் பிரளய விடங்கேசர்

# இரட்டைமணி மாலை

கவிமாமணி இலந்தை சு இராமசாமி



கைலாயத்தில் பனிலிங்கத்திற்கு அருவி அபிஷேகம்

உ

காரூர்

# பிரளய விடங்கேசர் இரட்டை மணிமாலை

‘கவிமாமணி’

இலந்தை. சு. இராமசாமி

கானூர்

# பிரளயவிடங்கேசர் இரட்டை மணிமாலை

இயற்றியவர்

'கவிமாமணி'

இலந்தை சு. இராமசாமி

கானூர்

## சிவகாமி அம்பாள் சமேத பிரளயவிடங்கேசர் குடமுழுக்குத் திருநாள்

வெளியீடு 27-1-1985

முதற்பதிப்பு ஜனவரி 85
உரிமை பதிவு

வஞ்சத்தில் ஒன்றானை, நெஞ்சத்தில் நின்றானை, மாசற்றானை
வலம்வந்து கனியொன்றைப் பெற்றானை, வயிற்றானை,
துதிக்கையானை

விஞ்சித்தான் நின்றிட்ட கஜமுகனை வென்றானை, மாற்றிட்டானை
வித்தானை, மறையானை, குறையானை, வள்ளியினை
வெருட்டினானை

கஞ்சத்தாள் பதத்தானை, கதித்தோடும் மதத்தானை,
கருணையானை

கமண்டலத்தைக் கவிழ்த்தானை, காவிரியை விரித்தானை
கவிதையானை

தஞ்சம்தான் என்றவரைத் தள்ளானை, புரப்பானை, தாங்குவானை
தமிழ்கேட்கும் இருபெரிய செவியானைப் பாடுகிறேன்
காக்கநன்றே!

ஸ்ரீ பண்டாரி அச்சகம், சென்னை-108

ஓம் ஸ்ரீ காயத்ரி தேவ்யை நம :



# ஸ்ரீ காயத்ரி சுவாமிகளின் அருளுரை

காஞூரில் நடைபெற இருக்கும் ஸ்ரீ பிரளய விடங்கேசர் கோயில் கும்பாபிஷேக நன்னாளில் "காஞூர் பிரளய விடங்கேசர் இரட்டைமணிமாலை என்கிற பக்திப் பாடல் நூலை கவிமாமணி இலந்தை இராமசுவாமி அவர்கள் எழுதி அரங்கேற்றுகிறார் என்று கேள்விப்பட்டு மகிழ்ச்சியடைந்தேன். சரித்திரப் பிரசித்தியும் புராணத் தொன்மையும் கொண்ட மேற்படி ஈசுவரன் விஷயமாக வரும் இந்தப் பக்திநூல், ஆத்திக உலகம் மகிழ்வோடு வரவேற்று, படித்துப் பாராயணம் பண்ண வேண்டிய க்ரந்தமாகும். இந்தக் காவியத்தில் சொற்சுவையும் பொருட்சுவையும் நிறைந்து விளங்குவதைப் படிப்பவர்கள் நன்குணரலாம்.

கவிஞர் இராமசாமி அவர்கள், மேலும்மேலும் இத்தகைய பக்தி நூல்களை எழுதி இறைவனது இன்னருளுக்குப் பாத்திரராகும்படி எல்லாம்வல்ல ஸ்ரீ காயத்ரி மாதாவின் அருளைச் சிந்தித்து ஆசி கூறுகிறேன்.

10-1-85
சென்னை

ஸ்ரீ காயத்ரி சுவாமிகள்

# உபாசனகுலபதி ஸ்ரீ துர்க்கைச் சித்தர் அவர்களின்

## முன்னுரை

'போதுள்ள போதே புறப்பட்டு வாருங்கள், பொற்புடனே
மாதுள்ள தேவன் வழிபார்த் திருக்கின்றான், வாய்த்திடவே
ஏதுள்ள தென்னவே ஏங்காதீர், எக்காலும், எவ்விடத்தும்
யாதுள்ளும் உள்ள அரனே அளிப்பான் அபயங்களே!'

கானூர் பிரளய விடங்கேசர் இரட்டை மணிமாலையை யாத்த 'கவிமாமணி' இலந்தை. சு. இராமசாமி, தெய்வக் கவிஞர். சிவபெருமான் தமிழில் விளைந்த அமுதங்களைச் சுவைத்து மகிழ்பவர். சிவபெருமானைக் காலகாலன் என்றும், ஈசானன் என்றும் அழைப்பது, காலங்கள் எல்லாவற்றையும் கடந்தவன் அவன் என்பதனாலேயே. நாவுக்கரசர் முதல் தாயுமானவர் வரை சிவனடியார்கள் பாடிய தமிழ் மாலையில் இன்றும் மணந்துகொண்டிருப்பவன் சிவபெருமான்.

சிவபெருமானை வழிபடுவது மோட்சத்துக்கு வித்து. சிவபெருமானை வழிபடுவது பாவ அழுக்குகளைக் கழுவும் பெருவழி. சிவபெருமானை வழிபடுவது இகத்தில் இன்பம் கிடைக்கத்துணை செய்வது. சிவபெருமான்தான் குபேரன். சிவபெருமான்தான் வற்றாது வழங்கும் கொடைவள்ளல். இந்த உண்மையை நன்கு உணர்ந்தவர் சுந்தரமூர்த்தி நாயனார். பரவையை விரும்பினார். பணத்தையும் கேட்டார் இரண்டையும் கொடுத்தார் இறைவன். பன்றிகட்குப் பால் கொடுத்துக் காப்பதுமுதல் பசுக்களான ஜீவர்களைக்காப்பது வரை எல்லாப் பணிகளையும் அவர் ஒருவரே செய்கிறார்.

சிவபெருமானைச் சோமவாரத்திலும், பிரதோஷத்திலும், மாத சிவராத்திரியிலும் வழிபடுவது பற்றி சிவாகம நூல்கள் சிறப்புறப் பேசுகின்றன. பஞ்சாட்சரம் ஒன்றே புவியைப் படைக்கும், புவனத்தையும் உடைக்கும். சிவம் சக்தியோடு இணைந்து பிரிக்கமுடியாத அர்த்த நாரியாக விளங்குகிறது.



காலங்கள் முடியும்போது பிரளயங்கள் தோன்றுகின்றன. பிரளயங்கள் தோன்றும்போது புண்ணிய சாலிகளைக் கரையேற்றியும், பாபவான்களைப் பழுதறச் செய்தும் பரமசிவமே காக்கின்றது.

கானூரில் விளங்கும் பிரளய விடங்கேசர் காலகாலர். காலனைக் காலால் உதைத்தவர். மனிதர்களுடைய பாபங்களை, அவர்கள் பெற்றுவந்த சாபங்களைப் போக்கி, தூக்கி நிறுத்தி வைப்பவர். அவருடைய பேரருள் நிலைத்தது. இந்தப் பேருண்மைகளை நன்கு நமக்கு உணர்த்துவது இந்த இரட்டை மணிமாலை.

இரட்டைமணிமாலை இகத்தில் இன்பத்தைத் தேடித் தந்து, பரத்தில் நம்மைப் பவித்திரமாக்குவது. நீங்கள் அன்றாடம் சந்தியா காலங்களில் சிவபெருமானை இந்தப் பாடல்களால் போற்றிப் புகழுங்கள். இந்தப் பாடல்களில் உள்ள சொற்கள் தெய்வத்திருவருளால் தெளிந்த உள்ளத்திலிருந்து வந்தவை. சிவம் நிரந்தரமானது. அதுவே மங்களமானது. அதுவே இருட்டில் வெளிச்சம். அதுவே சம்சார பயத்தை நீக்குவது. கானூர் பிரளய விடங்கேசர் உங்கள் எல்லோருடைய வாழ்விலும் நிறைந்த மகிழ்ச்சியையும் அளவற்ற புண்ணியக் குவியலையும் தருவார். இந்த இரட்டை மணிமாலை சம்சாரக் கடலைக் கடத்துவிக்கும் தோணி-சிவத்துக்கும் ஜீவனுக்கும் ஓர் இணைப்புப்பாலம். இதைப் படிப்பவர்களும் படிக்கச் செய்பவர்களும், படித்துக் கேட்பவர்களும் எல்லா விதமான க்ஷேமங்களையும் அடைய ஸ்ரீ ஜெயதுர்க்கா தேவியின் திருவடிகளைப் பிரார்த்திக்கின்றேன்.

ஜெயதுர்க்கா பீடம்
சாக்தமந்த்ரதந்த்ர அகாடமி
C/62, நல்லதம்பி சாலை,
பம்மல், சென்னை-600 075.

அன்னை அருள்
ஸ்ரீ துர்க்கைச் சித்தர்

## என்னுரை

எண்ணங்களுக்கு வரிவடிவம் கொடுக்க எழுதுகோலைப் பயன்படுத்துகிருேம்.

எழுதுகோல் எழுத்தாவதில்லை. அது ஒரு கருவி. அப்படித்தான் இறைவன் தனக்கு வேண்டியதைக் கவிஞன் மூலம் எழுதிக்கொள்கிருன்.

இந்த இரட்டை மணிமாலையைப் பொருத்தமட்டில் நான் ஒரு கருவி. கானூர் பிரளய விடங்கேசர்தான் 'கவிமாமணி'

கூட்டத்திலே கூறச்செய்து, நாட்டத்திலே சொல்லைப் பெய்து பாட்டுப்பல்லக்கில் பவனி வருபவர் அவர்.
சொற்கள்பல்லக்குத் தூக்கிகள். அவை வலுவானவை.
தாங்கும் சுமைக்கு அவை தவம் கிடப்பன.
மகா மேருவும் அவற்றின் வளைவுக்குள் சிக்கும்.
மாகடலும் அவற்றின் வடிவத்தில் நிற்கும்.
கவிதைக்கு வளைகிற தமிழ் அருள் சுமக்க மேலும் வளைகிறது.
வளைய வளைய வலு ஏறுமா?
ஏறுகிறதே!
நெளிய நெளிய நிமிர முடியுமா?
நிமிர்கிறதே!

கானூர்க் காற்று கவிதைக்கு விசிறி. அவ்வூர் மக்கள் வீசும் புயலிலும் விளக்குச் சுமக்கும் துணிச்சல் உடைய வர்கள் கட்டிக்கொண்டால் அணைப்பதுதானே!

அணைக்கும், ஆனுல் அணைக்காது.

உளிதட்டாச் சிவலிங்கம்
தளைதட்டாத் தமிழ்ப்பாடல்
உலாக்காணும் காட்சிக்கே
நிலாக்கோலம் போடுகிறேன்.
வெண்பாவும் கலித்துறையும் மேலடுத்து வருகின்ற
இரட்டைமணிமாலை இருபது பாடல்களும்
அந்தாதிபோல அமைந்து வருவனவாம்.
சிவத்தொண்டு, அதற்கோர் சிவசிதம்பரம்பிள்ளை.
அவர் தொண்டு தொடர்ந்திடவே ஆற்றுகிருர் அவர் பிள்ளை
சிந்தனையைச் செயலாக்கும் திரு. செல்லச்சாமி
பக்கத் துணையாகத் திரு. பா. தியாகராஜபிள்ளை
சாந்தப் பணி செய்ய திரு. சந்திரசேகரம்பிள்ளை
என்றே அணியணியாய் இவ்வூரார் தொண்டினிலே
பக்தி, தமிழ்ப்பாடல், பண்பாடு, வளர்வனவாம்
இவர்கள் செயல்போற்றி இறைவனை வேண்டுகிறேன்.
வருகின்ற நாளெல்லாம் திருநாளாய் வளர்ந்திடுக!

என்னைப் பணிகொண் டிரட்டை மணிமாலை
தன்னைத் தமிழ்செய்த சத்தியமே-மன்னும்
பிரளயவி டங்கேசப் பெம்மானே, பாடல்
பொருள்நயந்தார்க் கீவாய் புகழ்.

இலந்தை சு. இராமசாமி

# பதிப்புரை

'நடந்ததெல்லாம் அவன்பரம், நடப்பதெல்லாம் அவன்பரம் நடக்கப்போவது அவன்பரம், நம்பிக்கைதான் நம்பரம்.'

கும்பாபிஷேகத் திருப்பணி தொடங்கிய நாளிலிருந்து ஒவ்வொன்றும் தானுகக் கூடிவந்த செயலை எண்ணிப் பார்க்கும்போது, இறைவன் திருவருளை வியக்காமல் இருக்க முடியவில்லை.

குடமுழுக்குச் சமயத்தில் நூலொன்று வெளியிட வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. அந்த எண்ணம் விகசித்து, பொங்கி பரவி இப்படிச் செயலாகப் பரிணமித் திருப்பதை எண்ணி மகிழ்கிறேன்.

சென்னையில், கவிஞர்கள் எங்களுக்களித்த பாராட்டுக் கூட்டத்தில், கவிமாமணி இலந்தை இராமசுவாமியவர்கள், பிரளயவிடங்கேசப் பெருமானுக்கு இரட்டை மணிமாலை எழுதி அரங்கேற்றுகிறேன் என்று சொன்னபோது அனைவரும் மகிழ்ந்தோம்.

பிறகு, இரட்டை மணிமாலையை எழுதி அவர் படித்துக் காட்டியபோது எல்லோரும் வியந்தோம்.

இறைவன் அருள் சொல்லும் பொருளாக நிகழ்த்தும் நூல் சிறப்பாகத்தானே அமையும்.

கானூர்த் தெய்வங்கள் இந்தக் கவிமாலையில் உலா வரக் காணுகிறேன்.

கானூர் இயற்கைக் காட்சிகள், கொந்தளகுல திலகம் சுந்தரசாமந்தர் வரலாறு இவையெல்லாம் தன்னகத்தே கொண்டு மிளிரும் இவ்விரட்டை மணிமாலை, இறைவனின் அருட்பிரசாதம்.

இந்த நூலில், செந்தமிழ் தென்றல் சுமந்து வருகிறது. வீசுமிளங் காற்றில் மெல்லத் தவழ்ந்துவரும் வாச நறு மணத்தின் மாண்பை இதில் உணர்கின்றோம். உள்ளதை விடாது, அல்லதைத் தொடாது நல்லதை இயம்பும் இந்த நூல், நெஞ்சத்தில் பக்திப் பயிர் வளர்க்கும். இந்த நூலைப் பதிப்பிப்பதில் பெருமகிழ்ச்சி யடைகிறேன். நூலை ஆக்கித் தந்த கவிமாமணிக்கு எனது நன்றி. பிரளய விடங்கேசப் பெருமான் அனைத்து நலனும் அனைவர்க்கும் அருள்க!

**கானூர்**

**10-1-85** **செல்லச்சாமி**

# கானூர் பிரளயவிடங்கேசர் இரட்டை மணிமாலை

காப்பு

பீடுயரும் கானூர் பிரளயவி டங்கர்மேல்
பாடும் மணிமாலை பாங்குறவே-நீடுபுகழ்
தாண்டவனே, கானூர்த் தயாபரனே, ஐங்கரத்து
ஆண்டவனே நீயே அருள்.

இரட்டைமணிமாலை பிரபந்த வகைகளுள் ஒன்று. இந்த இரட்டை மணிமாலை சங்கம் வளர்த்த தமிழ் மதுரையை அடுத்து பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் உள்ள கானூரில் எழுந்தருளியிருக்கும் சிவகாமி அம்பாள் சமேத பிரளய விடங்கேசரைப் போற்றிப் பாடும் நூல். சுயம்புவாக எழுந்தருளியுள்ள ஈசர்க்கு வீரமார் பாண்டிய மன்னனின் சேனுபதி கொந்தளகுல திலகம் சுந்தரசாமந்தர் மணிமண்டபம் கட்டியதாக வரலாறு.

இறைவனின் அறுபத்து நான்கு திருவிளையாடல்களுள், ஒரு திருவிளையாடலுக்கு நிலைக்களனுக அமைந்த சிறப் புடையது கானூர்.

காப்பு

வரலாற்றுப் பெருமைமிக்க கானூரிலே எழுந்தருளி யிருக்கும் பிரளய விடங்கேசப் பெருமானைப் போற்றிப் பாடும் இரட்டைமணிமாலை சிறப்பாக அமைய, கானூரிலே மிகச்சிறப்பாக வீற்றிருந்து அருள்புரியும் ஐங்கரத்து ஆண்ட வனுகிய கருணைமிகு தாண்டவ விநாயகனே நீயே, காப்பாக அமைந்து அருள் புரிவாயாக.

## நூல்

### வெண்பா

உலக உருண்டை ஒருகண மேனும்
விலகி நடவா விதியை-நலமாய்
விதித்தவா அண்டம் விளைத்தவா, ஞானம்
பதித்தவா எம்மைக் கண் பார்.

### கட்டளை கலித்துறை

பார்வை படுவன பச்சை வயல்கள், பனிமலரின்
வேர்வை படுவன வெய்யோன கதிர்கள், விழுந்தமலர்ப்
போர்வை படுவன பூவையர் சேலை, புவியினிலே
தீர்வை படுவன தென்னு டுடையவன் தீர்ப்புகளே.

## நூல்

மங்கலச் சொல்லாகிய 'உலகம்' என்ற சொல்லில் தொடங்குகிறது இந்நூல் உலகம் சூரியனைச் சுற்றும் ஒரு கோள். இந்த உலக உருண்டையானது ஒருகணம்கூடத் தனது கதியில் மாருது ஒடுகிறது. அப்படி ஓடும் விதியை இயற்றி நடத்துகிற பரமனே, நீதானே அண்டமெல்லாம் படைத்து, அவற்றிற்கு இயக்கம்கொடுத்து ஞாலத்தில் உயிர்த்தவர்க்கு ஞானத்தையும் பதிக்கிருய். சகல நன்மைகளையும் அளிப்பது உன் பார்வை அன்ருே! அந்தப் பார்வை எங்கள் மேல் படவேண்டும்.

பார்வைபடுகின்ற இடங்களிலெல்லாம் பச்சை வயல்கள் கண்ணுக்குக் குளுமையளிக்கின்றன. இளங் காலைப் பொழுதினிலே புல்லின் நுனியில் தூங்குகிற வியர்வையாகிய பனித்துளிகள் ஞாயிற்றின் ஒளிக் கதிர்கள் பட்டுச் சுடர்கின்றன. மலர்சுமந்த மரங்கள் செடிகள், கொடிகள் இவற்றினின்றும் உதிர்ந்த மலர்கள் தரைக்குப் போர்வையாக விரிந்திருக்க. அதன்மீது நடக்கும் மங்கையரின் சேலை நுனி மலர்ப் போர்வையைத் தடவிச் செல்கிறது. இப்படிப்பட்ட கானூரில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் வழங்குகிற தீர்ப்பில் இவ்வையத்தின் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.



### வெண்பா

தீர்ப்பை எழுதும் சிவகாமி கேள்வனே
பார்ப்பாய்க் குதித்தே பறக்கின்ருேம்-சேர்ப்பாய்
வலிவும், நலமும், வளமும், அழகும்
பொலிவும் திகழும் புகழ்.

### கட்டளை கலித்துறை

புகழ்ந்திடும் சொற்குப் பொருள்தரும் கானூர்ப் புரவலனே
அகழ்ந்திடும் பக்தி அடியவர் நெஞ்சில் அமர்பவனே
நிகழ்ந்திடும் யாவும் நினதருள் ஆணை நெறியலவோ
திகழ்ந்திடும் வெற்றி சிறந்திட ஓர்மொழி செப்புகவே

நடைபெறும் யாவும், இறைவா, நீ விதித்த தீர்ப்பின் படி நடக்கின்றன. அன்னை சிவகாமியை இடப்பாகத்தே கொண்ட தேவா, உன் படைப்பில் நாங்களெல்லாம் குழந்தைகள். இறக்கை சற்றே முளைத்த குஞ்சுகள்போல் பறக்கவும் முடியாமல், குதிக்கவும் முடியாமல் தத்திக் கொண்டிருக்கிருேம். இந்த வாழ்வை இனிதே நடத்திடும் பலங்களை நீ யருளவேண்டும். எதையும் தளராது செய்யும் வலிவும், உடல், உள்ள நலமும், வாழ்வுக்கு வேண்டிய வளங்களும், காண்பார் மீண்டும் காண விழையும் அழகும், பொலிவும். எல்லாவற்றிற்கும் மேலாக நிற்கின்ற புகழும், இறைவா, நீ தரவேண்டும்.

புகழைத் தருவதும், புகழைப் பெறுவதும் சிறப்புத் தான். ஆனுல் புகழ்கின்ற சொல்லுக்குப் பொருத்தமானவராக அமைவது மிகமிகச் சிறப்பு. சிறப்புக்கெல்லாம் சிறப்பாக, புகழப்படும் சொல்லுக்குப் பொருளாக அமைகின்ற கானூர்ப் புரவலனே, ஆழ்ந்த பக்திகொண்ட அடியவர் நெஞ்சில் தங்கி அருளாட்சி புரிகின்ற ஐயனே, உலகில் நிகழ்ச்சிகள் உன் ஆணையில் நிகழ்கின்றன. எங்களது வாழ்வில் வெற்றி சிறந்திட ஓர் வார்த்தை சொல்லக்கூடாதா?

### வெண்பா

செப்பை அடுக்கிச் சிறுவர்கள் ஆடுகிருர்
அப்பா உனக்கண்டம் அப்படியோ-ஒப்பில்லா
மாமணியே கானூர் வதிமணியே நெஞ்சத்துத்
தூமணியே நீயே துணே.

### கட்டளை கலித்துறை

துணேக்கரம் நீட்டித் துவண்டு, பசியால் துடிதுடித்து
வணக்கங்கள் சொல்லி வளேந்து, மறுகி, மனமிளகாப்
பிணக்குடை யார்முன் பிணிபடும் ஈனப் பிறவியுண்டோ
மணக்கிற கானூர் வதியும் சிவனே வணங்கிடினே!

---

சொல்லடுக்கி ஆடுகிறேம் நாங்கள். சிறுவர்கள் செப்பெடுத்து அடுக்கி விளேயாடுகிருர்கள். ஆண்டவா, உனக்கு அண்டங்கள் செப்புக்களா? மணிகளில் எல்லாம் சிறந்த மாமணியே, கானூரில் தங்கி ஒளி சேர்க்கும் ரத்தினமே, பக்தர்களின் நெஞ்சத்தில் உறையும் சுடர் மணியே நீயே துணே.

துணேசெய்வார் யாருண்டு என்று தேடித்தேடி அலேயும் தன்மை மனித வாழ்க்கையிலே ஏதோ ஓர்நிலேயில் அமைந்துவிடுகிறது. பசியால் துயருறும் வயிறு தா, தா என்று கேட்டுத் துடிக்க, கை கொடு கொடு என்று நீள, மானம் விடு விடு என்று தடுக்க கை தாழ்கிறது. மற்ருெரு கை துணேக்கரமாக அதைத் தாழாது தாங்கிக் கொள்கிறது. அம்மம்மா, இது கொடுமை! ஈயா உலோபியர்முன், உடல் வளே ந்து, உள்ளம் நைந்து தொழுது நிற்கும் இந்தப் பிறவிப் பிணிக்கு மருந்தே கிடையாதா? ஏனில்லே? பூமணக்கும் கானூரில் புகழ்மணக்க வீற்றிருக்கும் பிரளயவிடங்கரை வணங்குங்கள்.



### வெண்பா

வணங்கிடக் கைகளும் வாழ்த்திட வாயும்
இணங்கிட நெஞ்சும் இருக்க-பிணங்கியே
என்னென்ன வோசெய்தே எங்கெங்கோ செல்லுகிறேம்
பொன்தருவான் இங்கிருக்கும்போது.

### கட்டளை கலித்துறை

போதுள்ள போதே புறப்பட்டு வாருங்கள், பொற்புடனே
மாதுள்ள தேவன் வழிபார்த் திருக்கின்ருன், வாய்த்திடவே
ஏதுள்ள தென்னவே ஏங்காதீர், எக்காலும் எவ்விடத்தும்
யாதுள்ளும் உள்ள அரனே அளிப்பான் அபயங்களே!

---

வணங்குவதற்காகக் கைகள் பெற்றிருக்கிறேம். வாழ்த்துவதற்காக வாய்பெற்றிருக்கிறேம். நெஞ்சம் இருப்பதே அவனே நினேப்பதற்காகத்தான். பொன்னெல்லாம் அள்ளித்தருபவன் இங்கிருக்கும்போது, என்னென்னவோ செய்கிறேம். எங்கெங்கோ போகிறேம், கைகளும், வாயும், நெஞ்சும் அவை விளே ந்த பயனேப் பெற வேண்டாமா?

பயன்பெறவேண்டும். உண்மை. ஆனல் அந்தப் பயனேப்பெற எத்தனே காலம் தள்ளிப்போடுவது? நாள் பார்த்தா நாதனே வணங்குவது? நாளே என்பது நமது வசமா? இதோ, இப்பொழுதே கைகளும், கால்களும், உடலும் நெஞ்சும் திடமாக இருக்கும்போதே தெரிசனம் செய்ய வாருங்கள். அழகாக அம்மையை இடப்பாகத்தே கொண்டிருக்கும் ஐயன் உங்கள் வரவுக்காக வழிமேல் விழி வைத்துக் காத்திருக்கிருன். போகும் பாதையிலே என்ன கிடைக்கும் என்று ஏன் தயங்கவேண்டும்? காலே எடுத்து வையுங்கள். அதுபோதும். மற்றவற்றை அவன் கவனித்துக் கொள்வான். எக்காலத்திலும் எல்லாவற்றிலும் எல்லா இடத்திலும் இருக்கும் அந்த மகாதேவன் நிச்சயம் அபயம் அளித்துக் காப்பான். அஞ்ச வேண்டாம்.

### வெண்பா

அபயம் அவன் தருவான் அவ்வழியில் நாமும்
உபயம் அளிப்போம் உயர்வோம்—சுபமாக
எல்லாம் நடக்க இராமசா மிக்கருள்
வல்லான் தருவான் வரம்.

### கட்டளை கலித்துறை

வரம்புக்குள் நம்மை வளைய விடுக்கின்ற மாமருந்தை
நரம்புக்குள் நாதம் நடத்திடும் நாதனை, நம்பிக்கையை
பிரம்புக்கு மேனி பெருமையாய்க் காட்டிய பேரருளை
சரண்புக்க பேருக்குச் சங்கட மேயில்லை சத்தியமே!

---

அஞ்சாமல் வாழ அவன் அபயம் அளிக்கிறன். நல்லது. பெற்றுக்கொண்டால் மட்டும் போதுமா? கொள்பவனும் கொடுக்கவேண்டாமா? அருளைப் பெறுவோம். தேவைப் பட்டவர்க்கு நாமும் கொடுப்போம், உயர்வு பெறுவோம். அன்று ஸ்ரீராமனுக்கு அருள் புரிவதற்காக இராமேஸ் வரத்தில் இராமநாதனாகவும், நெல்லை மாவட்டம் தெற்கு இலந்தைக் குளத்தில் கோதண்ட ராமேஸ்வரனாகவும் அமர்ந்து அருளிய சிவனே கானூரில் மேவி எல்லாச் செயல்களும் இனிதே நடக்க அருள்கிறன் வேண்டும் வரம் அவன் தருவான். வேண்டுவன நல்லனவாக அமைந்தால் போதும்.

போதும் என்ற வரம்பு கட்டிக்கொள்ள நமக்கு எளிதில் மனம் வருவதில்லை. ஆனால் வரம்பற்ற சத்தியமாக விளங்கு கின்ற மகாதேவன் நம்மை ஒரு வட்டத்துக்குள்தான் வளைய விடுகிறன். நரம்புகளின் துடிப்பில் நாதம் இசைக்கும் அந்த நாதனை, நடப்பதெல்லாம் நன்றாக நடக்கும் நம்பிக் கையை நமக்களிக்கும் தேவனை வணங்கிடுவோம். அன்று வைகைக்குக் கரைகட்ட வந்திக்கு உதவிய மாணிக்கம் அவன். எளியவர் பணியில் பிரம்படிபட்ட பேருள் அவன். அந்தப் பேருளைச் சரண் புகுந்தால் சங்கடம் என்பதே தலை காட்டாது. இது பொய்யில்லை. சத்தியம்.



### வெண்பா

சத்தியம் காக்கும் சமய கருப்பனெடு
உத்தம மீனுக்ஷி ஊர்த்தெய்வம்-மத்தியிலே
தாண்டவவி நாயகனும் தாங்குதிரு வேங்கடனும்
ஆண்டவனும் ஈசன் அணி.

### கட்டளை கலித்துறை

அணிசேனை சேர்க்க அரசன் கொடுத்த அருநிதியில்
மணியான மண்டபம் வாகாகக் கட்டி வணங்கிநின்ற
துணிவான பக்திகொள் சுந்தர சாமந்தன் தோத்தரிக்க
தணியாத சேனையைத் தான்கொணர்ந்தான்பதம் சாருங்களே

---

சத்தியம் காக்கும் பண்பைக் கருணை காட்டியும் தண்டித்தும் நடத்தும் சமய கருப்பனும், ஐந்தூர்ச் செல்வி யாகிய குலங்காக்கும் தாய் உத்தம மீனுக்ஷியும் ஊர்த்தெய் வங்களாக மக்களைக் காக்கிறார்கள். ஊரின் மத்தியிலே எழுந்தருளியிருக்கும் தாண்டவ விநாயகனும் காத்தருளும் திருவேங்கடமுடையானும் பிரளய விடங்கப் பெருமா னுக்குப் பேரணியாக விளங்கி அருள்பாலிக்கிறார்கள்.

அருள்பாலிக்கும் சொக்கன்பால் மாருத பக்திகொண்டு விளங்கிய கொந்தளகுலதிலகம் சுந்தரசாமந்தன் வீரமார் பாண்டிய மன்னனின் சேனாதிபதியாக விளங்கினார். படை திரட்ட அரசன் தந்த அருநிதியைச் சிவனடியார்க்குத் திருத் தொண்டு செய்யவும், பிரளய விடங்கப் பெருமான் திருக் கோயிலுக்கு மணிமண்டபம் கட்டவும் செலவு செய்து விட்டார். 'படையைக் கொணர்க' என்று மன்னன் ஆணையிட, சிவபெருமானிடம் வேண்டினார் சாமந்தர். குறித்த நாளில் படைவீரனுகக் குதிரை ஏறி, தேவர்களைச் சேனை வீரர்களாக மாற்றி அரசன் முன் தோன்றினன் சிவபெருமான். தனது அடியார்க்கிரங்கும் தெய்வமாகிய பரமன் திருப்பதம் போற்றுவோம்.

### வெண்பா

சாரும் உளிகொண்டு தட்டாம லேமுளைத்த
சீருடைய கானூர்ச் சிவலிங்கம்-பாரினிலே
ஈசனே நேரில் இறங்கிவந்து காக்கின்ற
நேசத்திற் கீதன்றோ நேர்.

### கட்டளை கலித்துறை

நேர்செல்லும் மக்கள், நெருங்கிய வீதிகள், நேசமனம்
வேர்செல்லும் பண்பாடு வித்தகம் காட்டி விளங்குநெறி
சீர்சொல்லும் பேரேரி, தென்னை, கழனி, செழுங்கதிர்கள்
ஊர்செல்லச் சாமிகள் ஒவ்வோர் திசையும் உதவுவரே!

---

போற்றுபுகழ் கானூரில் எழுந்தருளியிருக்கும் பிரளய விடங்கேசர் உளிகொண்டு செதுக்கப்பெறாத லிங்கத் திருமேனியுடையவர். இந்த உலகத்திலே இறைவன் தானாக இறங்கிவந்து மக்களைக் காக்கிறான். உயிர்கள் பால் அவன் கொண்டுள்ள நேசத்துக்கு இது ஒன்றே சான்றாக விளங்குகிறதன்றோ?

விளங்கும் திருவுடைய கானூரின் மக்கள் நேர்வழியில் செல்பவர்கள். ஊரின் வீதிகள் குறுகலாக இருப்பினும் மனங்கள் விசாலமானவை. பண்டைத் தமிழ்ப் பண் பாட்டின் ஆணிவேரை நாம் அங்கே காண்கிறோம். நன்கு கற்றும், எளிமையாகத் தோன்றும் மக்கள் நிரம்பிய அவ் ஊருக்கு கானூர்ப் பேரேரியும், தென்னந்தோப்புகளும், கழனிகளும், கழனிவளர் செழுங்கதிர்களும் அழகு சேர்ப்பன. அவ்வூருக்கு யாரேனும் சென்றால் ஒவ்வோர் எல்லையிலும் காவலாக அமைந்திருக்கும் கடவுளர்கள் வந்தவர்களை வரவேற்று காத்து இடரின்றி வழியனுப்பி உதவுகின்றனர்.



### வெண்பா

உதவி எனுமுன்னே ஓடிவரும் தெய்வம்
பதவி அளிக்கும் பரமன்-விதமாய்
நரிபரி ஆக்கிய நாயகன், கானூர்ப்
பிரளயவி டங்கர்புகழ் பேசு.

### கட்டளை கலித்துறை

பேசென்று சொல்கின்றாய், பேசுகின் றோம்பின் பெருகுகவி
வீசென்று சொல்கின்றாய் வீசுகின் றோம்நீ விதித்தபடி
தூசொன்றில் விண்ணைத் துளைத்திடும் சக்தி துலங்குமெனில்
தேசொன்று நின்புகழ் செப்புவேன் சக்திகள் சித்திக்கவே!

---

உதவி கொடுப்பதற்கும் ஒரு தகுதிவேண்டும். உழைத்துப் பெறும் செல்வத்தை அளிப்பது மிகச் சிறந்தது. ஓயாமல் சலிப்பதனாலே அளவற்ற செல்வங்கள் அள்ளித்தர ஆண்டவன் ஒப்பற்ற தகுதியுடையவனாகிறான். அவனிடம் உதவி கேட்க நினைத்தாலேபோதும். நினைக்குமுன்னே ஓடிவந்து அருள் புரிவான். ஆனால் நினைப்பிலே தூய்மை வேண்டும். நாற்காலிமேல் அமர்ந்துகொண்டு வகிக்கும் பதவி எல்லாம் பதவி அல்ல, அதற்கெல்லாம் மேலான பதவி அளிப்பவன் அவன். அடியவருக்காக எதையும் செய்வான். வாதவூரருக்காக நரியைப் பரியாக்கிய நாயகன் அல்லவா அவன்! அவன்தானே கானூரிலே பிரளய விடங்கராக அருள்பாலிக்கிறான்! அவன் புகழ் பேசுவோம்

பேசென்று நீ சொல்வதாலே, இறைவா, நாங்கள் பேசுகிறோம். நீ பாடென்று சொல்கிறாய், பாடுகிறோம். உன்னுடைய விதிப்பின்படிதான் எல்லாம் நடைபெறுகின் றன. சின்னஞ்சிறிய தூசொன்றில் விண்ணையே துளைக்கும் சக்தி வெளிப்படுவதை அணுகுண்டு போன்ற விஞ்ஞான சாதனங்களில் பார்க்கிறோம். அணுவிலே அளவற்ற சக்தி அளித்தது நின் வரமல்லவா? ஒளி பொருந்திய இறைவா, உன் புகழ் பாடுகிறேன். சக்திகளெல்லாம் சித்திக்கும் திறமருள்க!

### வெண்பா

சித்திக்க வேண்டுவன சிந்தனைகள், இந்நாளில்
புத்திக்கும் நெஞ்சுக்கும் போராட்டம்-வித்துக்குள்
காயிருக்கும், நல்ல கனியிருக்கும் நெஞ்சத்துள்
நீயிருக்க ஏனிந் நிலை?

### கட்டளை கலித்துறை

நிலைப்பில் நிலைக்கும் நிலையே நிறைவே நினைந்திடுமுன்
மலைப்பே மனத்தை வதைத்திட லாமோ மதிமயங்கி
தலைப்பை மறந்து சபையில் திணறும் தகைமையிலே
அலைப்புற் றிடாமல் அனைத்திலும் வெற்றி அருளுகவே!

---

சித்திகளின் திறம் சிந்தனையில் தெரியவேண்டும். நல்ல சிந்தனைகள் நம்மை வாழ்விக்கும். வாழ்வே ஒரு போராட்டம். செய் என்று மனம் சொல்லும், அது புலன்களின் இழுப்புக்கு ஆட்பட்டது. செய்யாதே என்று அறிவு சொல்லும். அறிவுக்கும் மனத்துக்கும் நாள்தோறும் நடக்கிற போராட்டத்தில் வாழ்வு சஞ்சரித்துக்கொண்டிருக்கிறது. சின்னதோர் விதைக்குள்ளே காயும் கனியும் மறைந்திருப்பதுபோல் சின்ன இதயத்தில் இறைவா நீயிருக்கிறாய், நீயிருக்கும்போதும் ஏனிந்தப் போராட்டம், ஏனிந்த நிலை?

நிலையானவன் நீ. பூரணத்தில் பூரணமாக விளங்கும் பூரணன் நீ. உன்றன் நிறைவை நினைப்பதிலே எங்கள் குறைகளை மறக்கிறோம். அடியெடுத்து வைக்குமுன் எங்கள் முன் விரிவது எங்களுக்கு மலைப்பாகவல்லவோ தெரிகிறது! கற்றோர் நிறைந்த அவையிலே பேச வந்தவன் தலைப்பை மறந்து பேசத் திணறினால் எப்படி இருக்கும்? அந்நிலையில் தான் நாங்களும் இருக்கிறோம். இறைவா, மலைக்கும் நிலையில் அலைப்புற்றிருக்காமல் எண்ணும் எண்ணங்களிலும் எடுக்கும் செயல்களிலும் வெற்றி அருளவேண்டும்.



### வெண்பா

அருள்நலம் காட்ட அறுபத்து நான்கு
திருவிளை யாடல் திளைத்தாய்-பெருமைதரும்
அஞ்செழுத்து மந்திரத்தை ஆணி அடித்திடுவாய்
நெஞ்சத்தில் எந்நாளும் நின்று.

### கட்டளை கலித்துறை

நின்றும், நிமிர்ந்தும், நெருங்கிடும் தெங்கின் நிறைஇளநீர்
என்றும் கிடைக்கும் எழில்வளர் கானூர் எழுந்தருளி
நன்று புரியும் நமசிவா யன்பதம் நாடிடுக
ஒன்றும் பெரிதில்லை ஒவ்வொன்றும் வெற்றி உலகத்திலே!

---

அருள்வது உனக்குப் பிடித்த தொழிலல்லவா? அதனால் தானே உன்னுடைய அருள் நலத்தை அறுபத்து நான்கு திருவிளையாடல்கள் மூலம் இந்த உலகிற்குக் காட்டி மகிழ்ந்தாய். தீராத விளையாட்டயரும் நீ இந்த விளையாட்டுப் பிள்ளைகளின் நெஞ்சில் நின்று நிலவ வேண்டும். ஐந்தெழுத்து மந்திரத்தை எங்கள் நெஞ்சில் பசுமரத்தாணிபோல் பதியவைப்பது உன்கடன்.

கடன் என்று கருதாமல் நாம் ஊற்றிய நீரை வாங்கித் திருப்பித் தருவதைக் கடன் என்று எண்ணித் தென்னைமரம் தாளாலே தானுண்ட நீரைப் பெருக்கி இனிமையாக்கித் தலையாலே தருகின்றது. ஆணவப் பிடிப்பென்னும் நாரும், ஓடும் தகர்த்து மனம் வெளிப்படும்போது பேரானந்தமாகிய இன்னீர் கிடைக்கிறது. அதைக் காட்டும் வகையில் நின்றும், நிமிர்ந்தும், நெருங்கியும், இருக்கும் தென்னை மரத் தோப்புகள் நிறைந்த கானூரில் எழுந்தருளியிருக்கும் பிரளய விடங்கப் பெருமானைப் போற்றி 'நமசிவாய' மந்திரத்தை நெஞ்சார ஓதினால் நன்றே விளையும். செயற்கரியது என்று ஒன்றுமே கிடையாது. வருவன எல்லாம் வெற்றியே. வாழ்வில் என்றும் மங்கலமே!

நூற்பயன்

அணிமாலை யாக அமைந்த இரட்டை
மணிமாலை போற்றி வணங்க-பிணியகலும்
பேறெல்லாம் கிட்டும் பெருகி வரும்ஞானம்
ஆறெல்லாம் நன்மை அறி.

நூற்பயன்

பிரளய விடங்கப்பெருமானுக்கு அணியாகச் சூட்டப்படும் இரட்டைமணிமாலையாகிய இப்பாமாலையை உளமாரக் கற்று, போற்றி இறைவனைப் பரவுவோருக்கு, நோயற்ற வாழ்வு கிட்டும். பதினாறுபேறுகளும் வாய்க்கும். அறிவு ஓங்கும். ஞானம் பெருகும். அவர்கள் செல்கின்ற வழியெல்லாம் சிறப்பான வழியாகும், நிச்சயம் ஜெயம் பெறுவார். நன்மையே கிட்டும். இதை அறிந்து முற்படுக!



